# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13.937 —1964 ජනවාරි 31 වැනි සිකුරාදා —1964.1.31

13,937 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு சனவரி மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 25 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

#### மகியாங்கனை உபபிரிவு

முன்னேற்றத் திருத்த வேலைகள் ஆறன் அமுன நீர்ப்பாசன திட்டத்துக்கான கேள்விப்பத்திரங்கள் பண்டாரவளையிலுள்ள ஊவா மாகாண நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 26 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில 22,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கு தகுதியுடையவராவார்.

3. இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் மகியாங்கனை உப பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 22 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வ அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப் படலாமாவென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்கமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் 25 ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்.. இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். டி. சி. குணவர்தன,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மகியாங்கனை உப பிரிவு.

மகியாங்கனை,
1964 ம் ஆண்டு தை மீ 21 ந் உ.

1–907—31.1.64 ம் திகதிய வர்த்தமானி இல. 13,937

### முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 4 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 7 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 1 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆண்டு தை (சனவரி) மீ 31 ந் உ.*

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும் அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.